அசல் வழக்கு எண். 134/2020 தேதி 22.01.2024

வா.சா.1- பொன்னுசாமி

1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வழக்கு சொத்துக்கள் எனது பாட்டனார் பொன்னம்பல கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். பொன்னம்பல கவுண்டர் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. பொன்னம்பல கவுண்டருக்கு ஒரு ஆண் மற்றும் இரண்டு பெண் வாரிசுகள். மேற்படி ஆண் வாரிசு எனது தந்தை ஆவார். பொன்னம்பலம் இறப்பிற்கு பின்பு சொத்துக்களை பாகம் பிரித்துக்கொள்ளவில்லை. பொன்னம்பல கவுண்டருக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி வேலாயி. அவருக்கு என் தந்தை மற்றும் இரண்டு பெண் குழந்தைகள். இரண்டாவது மனைவி முத்தம்மாள். அவருக்கு இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் குழந்தைகள். பொன்னம்பல கவுண்டர் வாரிசுகள் அனைவருக்கும் வழக்கு சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொன்னம்பல கவுண்டர் இறப்பிற்கு பின் வழக்கு சொத்துக்களின் பட்டாவில் அவரது வாரிசுகள் பெயர் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். என் தந்தைக்கு ஒரு மனைவி தான்.

2. எனது பாட்டா பொன்னம்பல கவுண்டரின் இரண்டாவது மனைவி மகன் 6ம் பிரதிவாதி ராசு . ராசுவின் மகன் 7ம் பிரதிவாதி. தாவா சொத்துக்கள் பொன்னம்பலத்தின் கிரைய சொத்துக்கள் என்பதால் அவரது 2வது மனைவி வாரிசுகள் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளதை நீக்கம் செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களில் பொன்னம்பலத்தின் இரண்டாவது மனைவியின் வாரிசுகளுக்கு உரிமை இல்லை. அவர்களுக்கு வேறு சொத்துக்கள் உள்ளது. தாவா சொத்துக்களில் முத்தம்மாள் வாரிசுகளுக்கு உரிமை உள்ளதால் தான் பட்டாவில் அவர்களின் பெயர் கூட்டாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 6 மற்றும் 7 பிரதிவாதிகள் சொத்துக்களை விற்க நடவடிக்கை எடுத்ததால் தாவா வழக்கு தாக்கல் செய்தேன். குடும்ப மேலாளர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்வதற்கு குடும்ப உறுப்பினர்கள் யாரும் எனக்கு எழுத்து மூலமாக கடிதம் எதுவும் தரவில்லை. என் தந்தைக்கு 5 மக்கள்.

3. அனைவருக்கும் தாவா வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும். என்னுடன் பிறந்தவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். வா.சா.ஆ-7 ஆவணம் குடும்ப மேலாளர் என்ற முறையில் அனுப்பி உள்ளேன். 3 ம் பிரதிவாதிக்கு 09.09.2020 ம் தேதி கொடுத்த மனுவில் நானும், என் தந்தையும் தாவா வீட்டில் குடியிருந்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-10 ஆவணம் பதிவு தபாலில் அனுப்பவில்லை. வா.சா.ஆ-10 ஆவணம் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி நான் கொடுத்த மனுவிற்கு பதில் கொடுத்துள்ளனர். மேற்படி பதில் சரியான முறையில் கொடுக்கப்படவில்லை.

4. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் படி கொடுக்கப்பட்ட மனு உரிய வரம்பிற்குள் வரவில்லை என்பதால் சம்மந்தப்பட்ட அதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் குடும்ப மேலாளர் என்ற முறையில் தாக்கல் செய்துள்ள இவ்வழக்க தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும், தாவா சொத்துக்களில் எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த மனுவின் மீது வருவாய் துறையால் உரிய சட்ட விதிகளுக்கு உட்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகளை பொறுத்து தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**